ஆண்டு-3 முதல் ஆண்டு-9 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய கல்வி நிலையம்
219, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a NewsPaper

# உதயன்

விலை ரூபா 5-00

ஆண்டு-5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கு மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகளுடன் நாளாந்த வகுப்புகளும் சனி, ஞாயிறு வகுப்புகளும் நடைபெறுகின்றன.

புதிய கல்வி நிலையம்
219, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 19 வியாழக்கிழமை (04 – 11 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 341

# வடக்கிலிருந்து இயந்திரங்களைக் கடத்தி விற்க முயன்ற ராணுவ அதிகாரிகள் கைது!

### இன்று படகுச் சேவை

யாழ்ப்பாணம், நவ. 4
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ-3)

## காங்கேசன் சிமெந்து ஆலை 'லேத்' மெஷினும் பிடிபட்டது

கொழும்பு, நவம்பர் 4
வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து மோட்டார் வாகன என்ஜின்கள் மற்றும் இயந்திரங்களை இராணுவத்துக்குரியவை போன்று காட்டி — கொழும்புக்குக் கடத்திச் சென்று களவாக விற்க முயன்ற இராணுவ மேஜர் ஒருவரும் மூன்று கப்டன்களும் இராணுவப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் இருந்த இயந்திராதி வகைகள், லேத் மெஷின் ஆகியவையும் கூட இவ்வாறு கடத்தப்பட்டு விற்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

சுமார் இருபத்தைந்து லட்சம் ரூபா பெறுமதியான இயந்திரங்களை இராணுவத்துக்குரியவையாகக் காட்டி, அவற்றை கொழும்புக்கு எடுத்துச் சென்றமை —

அவற்றை வெளியாருக்கு விற்பனை செய்ய முயன்றமை —

ஆகிய குற்றச்சாட்டுகள் இந்த அதிகாரிகள் மீது சுமத்தப்பட்டிருக்கின்றன.

சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகள் இப்பொருள்களை விற்பதற்காக இராணுவத்துக்குச் சொந்தமான ஜீப் ஒன்றில் ஏற்றிச் சென்றபோது மூத்த இராணுவ அதிகாரி ஒருவரிடம்வகையாக மாட்டிக் கொண்டனர் என்றும் —

அதைத் தொடர்ந்தே இக்குட்டு வெளிப்பட்டது என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கைதான கப்டன்களில் ஒருவர் இராணுவத்தில் இருந்து விலக்கப்பட்டுவிட்டார் என்று இராணுவப் பேச்சாளர் ஒருவரை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (உ-எ-6)

## வாழைச்சேனையில் முஸ்லிம்கள் குடியேற்றம்

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனைப் பகுதியில் திட்டமிட்ட விதத்தில் இராணுவத்தினரால் முஸ்லிம்கள் குடியேற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாவலடி கிராமத்தில் பிரதான வீதிக்கு இருமருங்கிலும் இத்தகைய அத்துமீறிய குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது.

வீதியோரமாக அமைந்திருந்த காடுகள் படையினரால் ஏற்கனவே அழிக்கப்பட்டிருந்தன என்றும், அந்த இடங்களிலேயே முஸ்லிம்கள் இப்போது குடியமர்த்தப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## பல்கலை. அனுமதி: ஆராய 8 பேர் குழு

கொழும்பு, நவ. 4
பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்க தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறை மாற்றப்படவுள்ளது.

தற்போதைய அனுமதி முறையை மீளாய்வு செய்து, தேவையான மாற்றங்களைச் சிபார்சு செய்வதற்காக எட்டு உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைய உயர் கல்வி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா நியமித்துள்ளார்.

திறமையின் அடிப்படையிலும்—

மாவட்ட ரீதியிலும் இனவிகிதாசார முறையிலும் மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான சகல அம்சங்களையும் இந்தக்குழு ஆராயும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவிடம் தமது கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைத் தெரிவிக்க பொதுமக்களுக்கு சந்தர்ப்பமளிக்கப்படும் என்றும்—

அடுத்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன் குழு தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### ஸ்ரீலங்கா படை. பலத்தை அதிகரிக்க

## ராணுவ தொண்டர்படைக்கு இன்று முதல் ஆட்சேர்ப்பு

ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆட்பலத்தை அதிகரிப்பதற்காக அதன் தொண்டர் படைப் பிரிவுக்கும் ஆட்களைத் திரட்டுவதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று முதல் ஆரம்பமாகும் எனப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

18 முதல் 28 வயதுக்கு இடைப்பட்ட — எட்டாம் தரத்தில் சித்தியடைந்த— விவாகமாகாத — இளைஞர்கள் ஆட்சேர்ப்புக்குத் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி வரை பல மாவட்டங்களில் இந்த நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

### புரச்சந்தி முரளி



சுருட்டிப் போட்டு புலிகள் எடுத்ததாய் கணக்குக் காட்டியிருப்பினம்... ..

### யுனிசெவ் குழு ஆஸ்பத்திரிக்கு விஜயம்

யாழ்ப்பாணம், நவ. 4
யாழ்ப்பாணம் வந்திருக்கும் யுனிசெவ் பிரதிநிதிகள் நேற்றுக் காலை யாழ். ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர்கள், மருத்துவர்கள் ஆகியோரைச் சந்தித்து உரையாடினர்.

ஆஸ்பத்திரியைச் சுற்றிப் பார்வையிட்ட பிரதிநிதிகள் ஆஸ்பத்திரியின் குறைபாடுகள் தேவைகள் ஆகியவற்றைக் கேட்டறிந்தனர். (உ-15)

## வடக்கு நோக்கி ஓடிவரும் தமிழர்கள்!

யாழ்ப்பாணம், நவ. 4
ஸ்ரீலங்காப் படையினரின் கெடுபிடிகளைத் தொடர்ந்து கொழும்பு மற்றும் தெற்கின் சில பகுதிகளில் இருந்து தமிழர்கள் தமது சொந்த ஊர்களுக்கு திரும்பிக் கொண்டிருப்பதாக நேற்று யாழ். வந்து சேர்ந்த பயணிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு திரும்பிவந்த பலநூற்றுக்கணக்கானோர் கிளிநொச்சியில் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் வீடுகள், அறைகள் போன்றவற்றினுள் திடீர் திடீரெனப் பிரவேசிக்கும் பொலீஸார் சல்லடை போட்டு தேடுதல் நடத்துவதுடன், அங்கிருக்கும் பெட்டிகள், சூட்கேஸ்கள் மற்றும் அல்பங்கள் முதலியவற்றை நுணுக்கமாகச் சோதனையிடுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

வீடுகளுக்கு வரும் பொலீஸார் இளம் தம்பதிகளைத் தாக்குவதாகவும், தேடுதலின்போது பெறுமதியான பொருள்களைக் கையாடிச் செல்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ஒ-3)

## கிளாலிக் கடலில் மோதல்; போக்குவரத்து நடந்தது

### மாலையும் இரவும் ஹெலி தாக்கு

கிளாலி கடற் பகுதியில் நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் சிறிது நேரம் சண்டை இடம் பெற்றது என்றும்—

எனினும் பயணிகள் படகுகள் தடையின்றிப் போக்குவரத்தில் ஈடுபட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

உணவுப் பொருள்கள் மற்றும் சைக்கிள்கள் உட்பட வேறு பொருள்களும் கிளாலிக்கு எடுத்து வரப்பட்டன.

இதேவேளை, நேற்று முன்தினம் மாலையும் இரவும் ஹெலி தாக்குதல் நடத்தியது.

முகாம்களில் இருந்து ஷெல் வீச்சுக்களும் நடத்தப்பட்டன. 'பரா' வெளிச்சம் பாய்ச்சப்பட்டும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. (ஒ-3-117-17-15)

### கிட்டு வீரச்சாவடைந்த

## "அகத்" கப்பலில் இருந்து ஆயுதங்கள் மீட்பாம்

சென்னை, நவ. 4
ராஜீவ் காந்தி கொலைபற்றி விசாரணை நடத்திய மத்திய சிறப்பு புலனாய்வுக் குழு கடந்த ஜனவரி மாதம் சென்னைக்கு அப்பால் கடலில் மூழ்கிய 'எம். வி. அகத்' என்ற விடுதலைப் புலிகளின் கப்பலில் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளையும் மீட்டனர்.

புலனாய்வுக்குழு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்பது நாள் கடின முயற்சிக்குப் பின்னர் முக்கிய சான்றுகளை இக் கப்பலில் இருந்து வெளிக் கொணர்ந்ததாகவும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(3 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் கடத்தப்பட்ட 4பேர் றாகமவில் விடுதலை

### மற்றும் இருவரும் விடுவிக்கப்பட்டனர்

கொழும்பு, நவ. 4
கொழும்பில் கடந்த மாதம் இனந்தெரியாத குழுக்களினால் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் ஆறு தமிழ் இளைஞர்களும் விடுவிக்கப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகளை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

அவர்களில் நால்வர் கண்கள் கட்டப்பட்ட நிலையில் றாகமவில் மரங்கள் அடர்ந்த பிரதேசத்திலும் மற்றைய இருவர் கொழும்பிலும் விடுவிக்கப்பட்டனர் என அறிவிக்கப்பட்டது.

இதேவேளை —

கடத்திச் செல்லப்பட்ட இரு தமிழ் இளைஞர்கள் கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பின் றாகமவில் வைத்து வான் ஒன்றில் இருந்து வெளியே வீதியோரம் தள்ளி விடப்பட்டனர் என்றும்—

கடந்த 24 ஆம் திகதி இடம் பெற்ற மற்றொரு சம்பவத்தில் வெள்ளை வான் ஒன்றில் இருந்து இரு இளைஞர்கள் சனக் கூட்டத்தின் மத்தியில் தூக்கி வீசப்பட்டதாகவும்—

( 3 ஆம் பக்கம் பார்க்க)

## 'றுகுணு' கப்பலில் நேற்று மண்எண்ணெய் வந்தது

யாழ்ப்பாணம், நவ. 4
சுமார் 3 ஆயிரம் பரல் மண்எண்ணெயுடன் 'றுகுணு' கப்பல் நேற்று மாலை காங்கேசன் துறையை வந்தடைந்தது. இன்று காலை அந்தக் கப்பல் பருத்தித்துறைக்கு வந்ததும் மண் எண்ணெய் பரல்களை இறக்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'குமண' கப்பல் நேற்றுப் பிற்பகல் கொழும்பு துறைமுகத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி தெரிவித்தார்.

அந்தக் கப்பல் நாளை மறுதினம் சனிக்கிழமை' இங்கு

(3 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று வரை 14 பேர் கொலராவுக்குப் பலி!

யாழ்ப்பாணம், நவ. 4
வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதியில் நேற்று வரை 14 பேர் வாந்திபேதி (கொலரா) நோயினால் இறந்துள்ளனர் என்றும், மேலும் சுமார் 473 பேர் இந்நோயினால் பாதிக்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

மாவட்டத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் நேற்று நடத்திய வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இப் புள்ளி விவரங்களை தெரிவித்தனர்.

இந் நோயினால் கூடுதலாக குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்களே பாதிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-162)

## 'புக்காரா' விமானங்களை திருத்த ஆர்ஜன்ரீன நிபுணர்கள்பலாலியில்

### இன்னும் 3 வாரங்களில் தாக்குதல் நடத்தலாமாம்

பழுதடைந்த நிலையில் பலாலி விமானத் தளத்தில் முடங்கிக் கிடக்கும் 'புக்காரா' விமானங்களைத் திருத்துவதற்காக ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த நிபுணர்கள் மூவர் பலாலிக்கு விரைந்துள்ளனர்.

மோசமாக பழுதடைந்துள்ள விமானங்களை அந்த நிபுணர் குழுவினர் அவசரமாகத் திருத்திவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புக்காரா விமானங்கள் பழுதடைந்து விட்டதால், வடக்கில் தாக்குதல் நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, விமானங்கள் துரிதமாகத் திருத்தப்பட்டதும் — இன்னும் மூன்று வார காலத்தினுள் — மீண்டும் தாக்குதல் நடவடிக்கையில் அவற்றை ஈடுபடுத்த முடியும் என்று இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-5)

### கிழக்குத் தளபதி லக்கி அல்கம தலைமையில்

## கொக்கட்டிச்சோலைப் பகுதியில் 'வட்டரவும' ராணுவ நடவடிக்கை!

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலைப் பகுதியில் 'வட்டரவும' (சுற்றுவட்டம்) என்ற பெயரில் புதிய இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம, பிரிகேடியர் சாணக பெரேரா ஆகியோரின் வழிநடத்தலின் கீழ் இந்த இராணுவ நடவடிக்கை [illegible] இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொக்கட்டிச் சோலைப் பகுதிக்கிராமங்கள் பலவற்றில் இருந்து விடுதலைப் புலிகளை வெளியேற்றும் ஒரு நடவடிக்கையாகவே 'வட்டரவும' ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (ஒ-எ-6)

## குடும்பத்திற்கு 2 லீற்றர் ம. எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 4
'றுகுணு' கப்பல் மூலமாக எடுத்துவரப்பட்டுள்ள மண் எண்ணெய் ஒரு குடும்பத்துக்கு இரண்டு லீற்றர் என்ற வீதம் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படவிருக்கிறது.

ஒரு லீற்றர் மண்எண்ணெய் 25 ரூபாப் படி ப. நோ. கூ. சங்கங்கள் ஊடாக இவ்வார இறுதியில் இருந்து வழங்கப்படும் என செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-3)

பனை மரங்கள் கூட நிமிர்ந்து நின்று
பகைவனுடன் போராடும் பூமியிலே
நீமட்டும் வளைந்து நிற்கின்றாயே
நிமிர்ந்து கொள்
விழிகள் நெருப்பாக வெளியே வா.

* உத்தரவாதமும்
* உறுதியும்
* நவீன வேலைப்பாடுமுள்ள
தங்க நகைகளை தெரிவு செய்ய
சிறந்த ஸ்தாபனம்

இரத்தின மாளிகை

வீட்டுமுகவரி
தெணியம்பை வீதி,
வல்வெட்டித்துறை.

R. G. கட்டடம்
57, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

ஒடர்கள் குறித்ததவணையில் செய்துகொடுக்கப்படும்.

அறிவித்தல்

மூன்று வருட இடைவெளியின் பின் 18 - 10 - 93 முதல் இரத்தினமாளிகை என்னும் எமது ஸ்தாபனம் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

(சி-6509)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை. தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரை சந்தையடி, நல்லூர்.

(27885)

நல்ல நிலையில் உள்ள றோணியோ மெஷின் உடனடியாகத் தேவைப்படுவதால் விற்பனைக்கு உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்: இல. 918, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(சி-6501)

### வர்த்தகமும் கணக்கியலும்

ஆண்டு 9, கனிஷ்ட தொழில்நுட்ப பரீட்சைக்குரியதும் 10ஆம், 11ஆம், ஆண்டு 6 மாணவர்களுக்குரியதுமான வர்த்தகமும் கணக்கியலும் வினா-விடை வெளிவந்துவிட்டது. ஆக்கம்: என். ராஜன் B.Com. (சி-6450)

### புலமைப்பரிசில் பயிற்சி

விஜயதசமியன்று வெளியிடப்பட்ட புலமைப்பரிசில் மாதிரிப் பயிற்சியையும் (21 கட்டுரைகளையும், 10 வினாத் தாள்களையும் விடைகளுடன்) எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். எம்மிடம் நேரடியாகப் பெறுபவர்களுக்கு விசேட கழிவுண்டு. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(27871)

### இந்தியா ருடே

இந்தியா ருடே ஆண்டுமலர் 93-94 சொற்ப பிரதிகள் கைவசம், தீபாவளி வாழ்த்து மடல்கள் மொத்த விற்பனையாளர் மக்மிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். ஸ்ரீகாந் புத்தகசாலை, 165, பவர் கவுஸ் றோட், யாழ்ப்பாணம்.. (சி-6523)

### இலவச திருமண சேவை

27 வயது, உத்தராடம், செவ்வாய் 2, சுவிஸிலுள்ள மணமகனுக்கு ஏற்ற மணமகள் ஐரோப்பிய நாடுகளில் இருந்து எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி.

(27858)

### தவறிவிட்டது

கடந்த 28ஆம் திகதி பிற்பகல் மீசாலைக்கும் நுணாவில் சந்திக்குமிடையில் எனது கைச்சங்கிலி (1பவுணுக்கு 3மஞ்சாடி குறைவு) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நாகராசா உருத்திரா தேவி, சியாமளா வீதி, மீசாலை வடக்கு புத்தூர் சந்தி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(சி/6305)

---

## யாழ்ப்பாண மாநகரசபை

# கேள்வி அறிவித்தல் 1994

## சந்தைகள், இறைச்சிக் கடைகள்

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள் உட்பட சந்தைகள், இறைச்சிக் கடைகள், கோழிக்கடை ஆகியவற்றை இவ் அட்டவணையில் குறிப்பிடப்படும் காலங்களுக்கு 01 - 01 - 1994 முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கென அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் 19 - 11 - 1993 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்கள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணையும் கேள்விப் படிவக் கட்டணம் ரூ. 100/- உம் செலுத்துவதன் பேரில் 18 - 11 - 1993 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணி வரையும் யாழ்ப்பாண மாநகர சபை நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் ''........................ சந்தை / கடைக்கான'' கேள்வி என எழுதப்பட்ட கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 19 - 11 - 1993 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக சேர்க்கப்படல் வேண்டும்.

கேள்விகள் சம்பந்தமான மேலதிக விவரங்களை யாழ்ப்பாண மாநகரசபை நானாவித இறைவரிக் கிளையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம். தபாலில் அனுப்பப்படுமாயின் அதனால் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகர சபை பொறுப்பேற்க மாட்டாது.

கேள்விகள் 19 - 11 - 1993 பிற்பகல் 2-30 மணிக்கு திறந்து ஆராயப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி சமூகமாக இருக்கலாம்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
01 - 11 - 1993

| குத்தகை விவரம் | குத்தகை காலம் | கேள்விப் பிணை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|
| 1. பெரிய கடை மரக்கறிச் சந்தை | 1 வருடம் | 5000-00 | 150000-00 | |
| 2. குருநகர் சந்தை | '' | 5000-00 | 175000-00 | |
| 3. செங்குந்தா சந்தை | '' | 5000-00 | 275101-00 | |
| 4. நாவாந்துறை சந்தை | '' | 2500-00 | 75000-00 | |
| 5. பாசையூர் சந்தை | '' | 2500-00 | 40000-00 | |
| 6. கொட்டடி சந்தை | '' | 500-00 | 1000-00 | |
| 7. அரியாலை சந்தை | '' | 1000-00 | 15000-00 | |
| 8. கொழும்பு. சந்தை | '' | 500-00 | 1100-00 | |
| **இறைச்சிக் கடைகள்** | | | | |
| **கொட்டடி சந்தை ஆட்டிறைச்சிக் கடை** | | | | |
| கடை இல: 1 | 1 வருடம் | 2500-00 | 5600-00 | 123-75 |
| '' 2 | '' | 2500-00 | 6300-00 | 112-50 |
| '' 3 | '' | 2500-00 | 6000-00 | 112-50 |
| '' 5 | '' | 2500-00 | 10301-00 | 112-50 |
| '' 6 | '' | 2500-00 | 6000-00 | 112-50 |
| '' 7 | '' | 2500-00 | 5500-00 | 112-50 |
| '' 8 | '' | 2500-00 | 5651-00 | 112-50 |
| '' 11 | '' | 2500-00 | 5100-00 | 112-50 |
| **குருநகர் சந்தை மாட்டிறைச்சிக் கடை** | | | | |
| கடை இல. 1 | 1 வருடம் | 2500-00 | 50200-00 | 195-00 |
| '' 2 | '' | 2500-00 | 21000-00 | 195-00 |
| '' 3 | '' | 2500-00 | 35000-00 | 195-00 |
| '' 4 | '' | 2500-00 | 25000-00 | 195-00 |
| '' 5 | '' | 2500-00 | 51200-00 | 195-00 |
| '' 6 | '' | 2500-00 | 50101-00 | 195-00 |
| ஆ. இ. கடை 7 | '' | 2500-00 | 15000-00 | 195-00 |
| **நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை** | | | | |
| கடை இல. 1 | 1 வருடம் | 2500-00 | 7500-00 | 200-00 |
| '' 2 | '' | 2500-00 | 6600-00 | 200-00 |
| '' 3 | '' | 2500-00 | 6000-00 | 200-00 |
| '' 4 | '' | 2500-00 | 5450-00 | 200-00 |
| '' 5 | '' | 2500-00 | 5250-00 | 200-00 |
| '' 6 | '' | 2500-00 | 7050-00 | 200-00 |
| '' 7 | '' | 2500-00 | 5250-00 | 200-00 |
| ஆ. இ. கடை 8 | '' | 2500-00 | 5000-00 | 200-00 |
| கடை இல. 9 | 1 வருடம் | 2500-00 | 5300-00 | 200-00 |
| கோழி க. 10 | '' | 2500-00 | 5000-00 | 200-00 |
| **பாசையூர் மாட்டிறைச்சிக் கடை** | | | | |
| க. இல. 1 | 1 வருடம் | 2500-00 | 50000-00 | 135-00 |
| '' 3 | '' | 2500-00 | 25000-00 | 135-00 |
| அரியாலை மா. இ. | '' | 2500-00 | 16500-00 | 135-00 |
| அரியாலை ஆ. இ. | '' | 2500-00 | 10600-00 | 135-00 |
| **செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை** | | | | |
| கடை இல. 1 | 1 வருடம் | 2500-00 | 15000-00 | 112-50 |
| '' 2 | '' | 2500-00 | 7500-00 | 112-50 |
| புங்கங்குளம் ஆ. இ. | '' | 2500-00 | 12000-00 | 200-00 |
| '' மா. இ. | '' | 2500-00 | 20000-00 | 200-00 |
| நரிக்குண்டு மா. இ. | '' | 2500-00 | 62000-00 | 135-00 |

(சி-6304)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 10 — 1912

மறைவு: 14 — 11 — 1992

## திருமதி இலச்சுமிப்பிள்ளை கந்தையா

(தெல்லிப்பழை கிழக்கு)

திதி: 04—11—1993

உங்களை உருக்கி எங்களை வளர்த்த அம்மாவே! உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள், சகோதரர்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்,
உற்றார், உறவினர்கள்.

சுன்னாகம். (6710)

---

# 31ஆம் நாள் நீங்கா நினைவு தினம்



## திருமதி தவமணிதேவி குணசிங்கம்

மண்ணில் உறவு: 18 — 03 — 1946
விண்ணில் அமர்வு: 05 — 10 — 1993

குடும்ப ஒளிவிளக்கே தூண்டாத் திருவிளக்கே
மாண்டீர்கள் என்பதனை நம்ப மனம் மறுக்கிறதே!
சாயாது உம் வாழ்வு என்று நினைத்திருந்தோம்
காயாது கசிகின்ற கண்ணீரைத் தந்தீரே!

எமது கண்ணீர் அஞ்சலிகள் தந்து பணிகின்றோம்.

- குடும்பத்தினர்.

துன்னாலை மத்தி,
கரவெட்டி. (27875)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உதயம்: 15 — 06 — 1914

மறைவு: 15 — 11 — 1992

திதி: 04—11—1993

## திருமதி சின்னத்தம்பி விஜயம்மா

பேணுகின்ற பேறெல்லாம் பெற்ற பெருந்திருவே
விஜயம்மாவெனும் வித்தக நற்பேறே
உற்ற மக்களை, மருமக்களை, பேரப்பிள்ளைகளை,
பூட்டப்பிள்ளைகளை விட்டு
கற்றைச் சடை வள்ளல் கருணையடி சேர்ந்தனையே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய அம்பாளை வேண்டுகின்றோம்.

—பரசிங்கு குடும்பத்தினர்

[illegible]
பனிப்புலம். (6548)

---

# தேவை

சகல விதமான மணிக்கூடுகளும் திருத்துவதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. ஆங்கில அறிவு உள்ளவர்கள் விரும்பத்தக்கது. நல்ல நிலையில் உள்ள Rolex, Omega, Raymondweil, Phillipe, Pocket Watches போன்ற கைக்கடிகாரங்கள் நியாய விலைக்கு எடுக்கப்படும்.

**சில்வர் வாச் வேக்ஸ்**

(6580)

---

சன்மார்க்கசபை — குரும்பசிட்டி

## மணிவிழா நிகழ்ச்சித் தொடர் - 2

கருத்தரங்கு

# * தமிழர் கலைகள் *

இடம்: இராமநாதன் நுண்கலைப்பீடம்,
மருதனார்மடம்.

காலம்: **06 - 11 - 1993** சனி காலை 8-00 முதல் மாலை 3-00 மணி வரை
**07 - 11 - 1993** ஞாயிறு காலை 8-00 மணி முதல் மாலை 1-00 மணி வரை

அங்குரார்ப்பண உரை

மேதகு புதுவை இரத்தினதுரை
(பொறுப்பாளர் - கலை, பண்பாட்டுக் கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏ. ரி. பொன்னுத்துரை,
வைத்திய கலாநிதி எஸ். பிரபாகரன்.
இணைச்செயலாளர்கள்.

மணிவிழாச்சபை,
குரும்பசிட்டி. (27853)

---

வட பிராந்திய சத்யசாயி நிறுவனங்களுக்கு

# ஓர் அறிவித்தல்


நவம்பர் மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெற இருந்த ''அகில உலக அகண்ட பஜனை'' நவம்பர் மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளுக்குப் பின் போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

இப்படிக்கு:
[illegible]. R. சரவணபவன்
வட பிராந்திய சத்யசாயி
நிறுவனங்களின் ஆன்மீக இணைப்பாளர்

(27886)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் சங்கரப்பிள்ளை தம்பிஜயா

(ஓய்வுபெற்ற மலேஷியா கல்வித் திணைக்கள நிதிப் பொறுப்பாளர்)

மலர்வு: 16 - 03 - 1906
உதிர்வு: 14 - 11 - 1992

திதி: 04 — 11 — 1993

ஆறாத் துயரில் எம்மை மூழ்கவைத்து, மீளாத் துயில் கொண்ட தெய்வமே! பாசம்தனைப் பொழிந்து நேசம்தனை வளர்த்து, குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் நலிவுறும்:
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்,
சகோதரிகள், மைத்துனர்கள்.

'செல்வானந்தவாசா'
இணுவில், மேற்கு,
இணுவில். (27881)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அசுரத்தனம் நிரூபணம்

தெற்கில் தமிழ் இளைஞர்கள் மர்மக் கொலைக் குழுக்களால் கடத்தப்பட்டுக் கொல்லப்படுகிறார்கள். கிழக்கிலும் தமிழ் இளைஞர்களைக் கண்டபடி கைதுசெய்து, சுட்டுக்கொன்றுவிட்டு, சடலங்களை தெற்கே எடுத்துச் சென்று ரயர்போட்டு எரிக்கிறார்கள்.

வவுனியா, மட்டக்களப்பு, பதுளை உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் சித்திரவதைக் கூடங்கள் உள்ளன. இவற்றில் சில நடமாடும் வதை கூடங்கள்.

தெற்கில் தமிழ் இளைஞர்கள் கடத்தப்படுவது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையு. பதினேழு மனித உரிமைகள் அமைப்புகள் அங்கம் வகிக்கும் கூட்டமைப்பும் காரசாரமாகக் கண்டித்துள்ளன. ஸ்ரீலங்கா அரசு சர்வதேச மனித உரிமைகள் சாசனத்துக்கு விரோதமாக நடந்து கொள்வதாகச் சாடியுள்ளன.

இவை எல்லாம் ஸ்ரீலங்கா அரசின் காதில் விழப்போவதில்லை. மனித உரிமைகள் விடயத்தில் சர்வதேச அமைப்புகள் இதற்கு முன்னரும் பல தடவைகள் ஸ்ரீலங்கா அரசைக் கண்டித்தது உண்டு. ஆனால் அது திருந்தியதாக இல்லை.

மனிதஉரிமை மீறல்களால் எழக்கூடிய பாதிப்புகளை கொழும்பு அரசு தனது உபாயத்தினால் – போலித்தனமான சிலநடவடிக்கைகளால் — தடுத்து வருகிறது. மனித உரிமை மீறல்களை பெரிதாகத் தூக்கிப்பிடிக்கும் ஐரோப்பிய நாடுகள், ஸ்ரீலங்கா அரசு கேட்பதை விட அதிகளவு கடன் உதவிகளையும், நிதி உதவிகளையும் தாராளமாக வழங்கி வருவது கொழும்பின் உபாயத்தில் அவை மயங்கிவிடுவதையே காட்டுகிறது.

எனவே மர்மக் கொலைகள் குறித்து சர்வதேச அமைப்புகளின் கண்டனமும், சித்திரைவதை கூடங்கள் பற்றிய அரசாங்கமே நிறுவிய மனித உரிமைகள் பணியகத்தின் தகவலும் அரசின் அசுரத்தனமான போக்கை மாற்ற உதவும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

எனினும் கொழும்பில் கடத்திச் செல்லப்பட்டவர்களில் ஆறு தமிழ் இளைஞர்கள் கண்கட்டப்பட்ட நிலையில் நாகம காட்டிலும், கொழும்பிலும் விடுவிக்கப்பட்டதாக வெளிவந்த தகவல் அரசு இது விடயத்தில் குற்றவாளி என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

தெற்கில் ஜே.வி.பி.கிளர்ச்சியை அடக்குவதற்கு இராணுவத்தினால்—அரசினால்—இயலாத போது அரசாங்கமே மனித உரிமைகளை மீறும் விதத்தில் மறைமுகமாகப் பெருவாரியான படுகொலைகளை [Mass Murders] செய்தது.

அதேபோல தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை— ஆயுதப் போராட்டத்தை— இராணுவத்தினால் வெல்ல முடியாது என்று உணர்ந்தே தெற்கிலும் கிழக்கிலும் அரசு தமிழ் இளைஞர்களைப் பெருவாரியாகப் படுகொலை செய்யும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. அதன் ஆரம்ப கட்டம் அதிர்ஷ்டவசமாக அம்பலமாகிவிட்டதால் சர்வதேச அமைப்புகளின் அழுத்தத்துக்கு செவிசாய்க்க நேர்ந்தது.

ஆனால் இத்தோடு அரசு தனது கொலைக் கொடுரத்தை நிறுத்திக்கொள்ளுமா என்ற கேள்வி நீளுகிறது. கொழும்பில் தமிழ் இளைஞர்களை யார் கடத்தினாலும் அரசே அதற்குப் பொறுப்பு. விடுவிக்கப்பட்டது அரசு தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதற்குச் சமனாகும். தமிழர்களை இனப்படுகொலை செய்வதே அரசின் திட்டம் என்பதும் இதன் மூலம் நிரூபணமாகியுள்ளது. ஆகையால் அது உடனடியாக ராஜினாமாச் செய்ய வேண்டும். அவ்வாறு அது செய்ய மாட்டாது என்பதால் தமிழர் கொலைகள் தொடரமாட்டா என்பதற்கு உத்தரவாதமில்லை!

# சமாதானப் பேச்சிலிருந்து பலஸ்தீனர் வெளிநடப்பு!

### படை வாபஸ் குறித்து இழுபறி நிலை

ஜெருஸலம், நவ. 4

காஸாவிலும், மேற்குக் கரையில் உள்ள ஜெரிக்கோவிலும் பலஸ்தீனர்களுக்கு சுயாட்சி வழங்குவது தொடர்பாக எகிப்தில் நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளில் இருந்து பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்தனர்.

இந்த வெளி நடப்பை அடுத்து, அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் ஒரு வார காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டன.

காஸாவிலும் ஜெரிக்கோவிலும் உள்ள இஸ்ரேல் துருப்புக்கள் குறித்தே இஸ்ரேல் — பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகளுக்கு இடையில் கருத்து முரண்பாடு எற்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் இருந்து இஸ்ரேல் தனது படைகளை வாபஸ் பெறும் அதேசமயம் புதிதாகப் படைகளைக் கொண்டு வருவதாகவும் —

படை வாபஸுக்குப் பதிலாக இஸ்ரேல் தனது படைகளை விரிவுபடுத்துகிறது என்றும் — பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகள் குற்றஞ் சாட்டி உள்ளனர்.

இதற்கிடையில் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட தடங்கல் நிலை குறித்து, இஸ்ரேல் பிரதமர் ரபீன் நேற்று கருத்துத் தெரிவிக்கையில், இத்தடங்கல் நிலை குறித்து மக்கள் அச்சம் அடையத் தேவை இல்லை என்று கூறினார்.

சமீபத்தில் இஸ்ரேல் பிரதமர் ரபீனுக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத்துக்கும் இடையில் நியூயோர்க்கில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் காஸாவிலும், ஜெரிக்கோவிலும் இருந்து இஸ்ரேல் தனது படைகளில் கணிசமான அளவை வாபஸ் பெற வேண்டும். பலஸ்தீனர்களைக் கொண்ட உள்ளூர் பொலிஸ்படை ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

இஸ்ரேல் ஒப்பந்தத்தை மீறி வருவதாக பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகள் தற்போது குற்றஞ்சாட்டுகின்றனர். (இ–க)

## இஸ்ரேல் பிரதமர் ரபீன் அமெரிக்கா செல்கிறார்

வாஷிங்டன், நவ. 4

இஸ்ரேல் பிரதமர் ரபீன் அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரனுடன் பேச்சுவார்த்தை நடத்த எதிர்வரும் 12 ஆம் திகதி வாஷிங்டன் செல்லவிருக்கின்றார்.

செப்டம்பர் மாதத்தில் இஸ்ரேல்—பலஸ்தீன உடன்படிக்கை ஏற்பட்டதன் பின் இஸ்ரேல் பிரதமர் இப்பொழுதுதான் முதல் தடவையாக அமெரிக்கப் பயணம் மேற்கொள்கிறார். (இ–க)

### குடும்ப அட்டைகளில்

## வெளிநாட்டில் உள்ளோரின் பெயரும் பதிய கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.4

தமது குடும்ப அட்டைகளில் வெளிநாடுகளில் வசிக்கும் அங்கத்தவர்களின் பெயர்களைப் பதிவு செய்யாதவர்கள் அவற்றைப் பதிவு செய்யும்படி போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு கோரியுள்ளது.

இது சம்பந்தமாக போக்குவரத்துக் கண்காணிப்புப்பிரிவு விடுத்த அறிக்கை வருமாறு:-

அண்மைக்காலத்தில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகளின் போது சில குடும்பத்தினர், வெளிநாடுகளில் உள்ள தமது மணமாகாத அங்கத்தவர்களை குடும்பப்பதிவு அட்டையில் பதியாமல் விட்டது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இதனால் ஏற்படக் கூடிய விண்சிரமங்களை கருத்திற்கொண்டு சகல குடும்பத்தினரும் தத்தமது அட்டைகளைச் சரிபார்த்து, வடபகுதிக்கு வெளியே வசிக்கும் உறுப்பினர்களின் பெயர் தவறுதலாக விடுபட்டிருப்பின் அதனைச் சேர்த்துக் கொள்ளும்படி கேட்கின்றோம்.

அத்துடன் திருமணமான குடும்பத்தினர் சிலர் இதுவரை தமக்கென தனியான குடும்பப்பதிவு அட்டை பெற விண்ணிப்பிக்காதுள்ளனர்.

குடும்பப்பதிவு அட்டையின் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டு சகல குடும்பத்தினரும் தமக்கென தனியான குடும்பப் பதிவினைப் பதிந்து குடும்பப்பதிவு அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும்படி போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் குடும்ப அட்டைப் பகுதியினர் அறிவிக்கின்றனர்.

வேலணை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் (யாழ். மத்திய பஸ் நிலையத்திற்கு முன்) அத்தியடியில் அமைந்துள்ள குடும்பப்பதிவு அட்டை செயலகத்திலும் —

சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழைப் பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் கோண்டாவில் புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள குடும்பப்பதிவு அட்டை செயலகத்திலும் —

சாவகச்சேரி, பளை, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் சாவகச்சேரி அவசர அனுமதி வழங்கும் காரியாலயத்தில் அமைந்துள்ள குடும்பப் பதிவு அட்டை செயலகத்திலும் —

கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் மாலுசந்தியில் அமைந்துள்ள குடும்பப் பதிவு அட்டை செயலகத்திலும் —

குடும்ப அட்டை சம்பந்தமான பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை வடபகுதிக்கு வெளியே செல்வோருக்கான விண்ணப்பப்படிவ விற்பனை நிலையங்களிலும், குடும்பப் பதிவு அட்டை செயலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு குடும்பப்பதிவு அட்டைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## விண்ணப்ப படிவங்கள் குமணவில்

யாழ்ப்பாணம், நவ. 4

1992ஓகஸ்ட் மாதம் நடந்த ஜி.சி.ஈ. (உயர்தர) பரீட்சையில் தோற்றிய மாணவர்கள், பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி கோருவதற்கான விண்ணப்பப்படிவங்கள் இவ்வாரம் யாழ்ப்பாணம் வந்துசேரவுள்ளன.

இவ்வார இறுதிக்குள் பருத்தித்துறைக்கு வந்து சேரும் 'குமண' கப்பலில் இப்படிவங்கள் எடுத்துவரப்படுவதாகவும்—

படிவங்களைப் பெற்று நிரப்பி யாழ். பல்கலைக்கழகத்திலேயே ஒப்படைக்கலாம் என்றும் — யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. கே. பரமேஸ்வரன் தெரிவித்தார்.

## கல்வித்துறைக்கு ரூ. 40 கோடி

நாட்டின் கல்வித் துறையை அபிவிருத்தி செய்வதற்காக உலகவங்கி 40கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் கலாசார விவகார அமைச்சர் டபிள்யு. ஜே. எம். லொக்கு பண்டார இதனைத் தெரிவித்தார். (இ-எ)

## மீனவர் இன்னும் கரை திரும்பவில்லை

குருநகர், நவ. 4

கடந்த 29 ஆம் திகதி பூநகரி—பெரியவெலிப் பகுதியில் படையினர் தாக்குதல் நடத்தியபோது காணாமற்போன மீனவர் ஒருவர் இன்னும் திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

குருநகரைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் குரூஸ் அல்லது லோறன்ஸ் என்பவரே காணாமற்போனவர் ஆவார்.

## வீதி விளக்குகள்

வடமராட்சி, நவ. 3

வல்வெட்டித்துறை நகரசபை நகரின் முக்கிய இடங்களில் வீதி விளக்குகளைப் பொருத்தி உள்ளது.

முதற்கட்டமாக நகரில் 9 விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. [இ-173]

### குடாநாட்டு மாணவர் நிலை குறித்து

# யுனிசெவ் பிரதிநிதிகள் ஐ. நாவிடம் அறிக்கை சமர்ப்பிப்பர்

யாழ்ப்பாணம், நவ. 4

குடாநாட்டு மாணவர்களின் கல்விப்பாதிப்பு, பல்கலைக்கழக அனுமதி பாதிப்பு ஆகியன குறித்து ஐ. நா. சபைக்கு யுனிசெவ் அறிக்கை சமர்ப்பிப்பதுடன் இந்தப் பாதிப்புக்களில் இருந்து குடாநாட்டு மக்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த யுனிசெவ் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வந்த யுனிசெவ் பிரதிநிதிகள் தமது குறுகிய கால விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று கொழும்பு புறப்பட இருந்தனர்.

இவர்கள் தமது விஜயத்தின் போது யாழ். கல்வி அலுவலகத்துக்கும் சென்று கல்வி அலுவலக அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினர்.

யாழ். மாவட்டத்தில் 5ஆம் ஆண்டுவரையான 215 பாடசாலைகளில் பெரும்பாலான பாடசாலைகள் இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்துள்ளன என்றும்—

இடம் பெயர்ந்த பாடசாலைகளில் [illegible] மாணவர்கள் அடிப்படை சுகாதார வ[illegible] வசதிகள் இன்றி சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும்—

கல்வி பயில்வதற்கு தேவையான பென்சில், கொப்பி இன்றி மாணவர்கள் கஷ்டப்படுவதாகவும்— பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. துரை தியாகராசா யுனிசெவ் பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறினார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக நடக்கும் யுத்தத்தால் மாணவர்கள் கல்வி நிலை வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும்—

பல்கலைக்கழக அனுமதியில் [illegible] கொழும்பு மாவட்ட மாணவர்களுடன் ஒருவசதியும் அற்ற எமது மாணவர்கள் போட்டிப்பரீட்சையில் தோற்ற வேண்டியுள்ளதாகவும்—

ஆகவே பல்கலைக்கழக அனுமதி முறையில் கடைப்பிடிக்கும் கொள்கையை மாற்றும்படி ஐ. நா. சபை இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டும என்றும்— யுனிசெவ் பிரதிநிதிகளை பிரதிக்கல்விப்பணிப்பாளர் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதில் அளித்த போதே ஐ. நாவிடம் இது தொடர்பாக அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதாக யுனிசெவ் பிரதிநிதிகள் உறுதி அளித்தனர் ((இ-3)

### நாட்டில் ஓர் அரசே இருக்க முடியும்

# நீதிமன்றத்தில் சவால் விடுவது மாகாண சபையின் அலுவல் அல்ல

### ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, நவ. 4

நாட்டில் ஓர் அரசாங்கமே இருக்கமுடியும். அரசாங்கத்துக்குள் பல அரசாங்கங்கள் இருக்க முடியாது. மத்திய அரசும் நாடாளுமன்றமும் வகுக்கும் தேசியக் கொள்கைகளையே மாகாணசபைகள் அமுல்செய்ய வேண்டும். மத்திய அரசுக்கு நீதிமன்றத்தில் சவால் விடுவது மாகாணசபைகளின் அலுவல் அல்ல.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தலத்து ஓயா மத்திய கல்லூரியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி மேலும் சொன்னதாவது:-

ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசியக் கொள்கைகளை அமுல் செய்யும் கருவிகளாகவே மாகாணசபைகளும் உள்ளூராட்சி சபைகளும் உள்ளன. தேசியக் கொள்கைகளை வகுப்பது மாகாண சபைகளின் விஷயம் அல்ல. ஆகவே மாகாணசபையை எதிர்க்கட்சிதனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அல்லது ஆளும் கட்சி தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது ஒரு பொருட்டல்ல. — என்றார்

## இன்று

யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கான சந்திப்பு ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் கல்வித் திணைக்களம் நடத்தி வரும் மாவட்ட நிலை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் நாளை பிற்பகலில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் பாடசாலை அணிகள் வருமாறு:-

கொக்குவில் இந்துவில்

★ 17 வயதுப் பிரிவு:- ஹாட்லி எதிர் ஸ்கந்தா.

★ 17 வயது:- புங்குடுதீவு ம. வி. எதிர் தேவரையாளி இந்து

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்

★ 15 வயது:- உரும்பராய் இந்து எதிர் யூனியன் கல்லூரி

★ 17 வயது:- புங்குடுதீவு சண்முகானந்தா எதிர் இணுவில் மத்திய கல்லூரி

★ 17 வயது:- உரும்பராய் இந்து எதிர் மட்டுவில் சரஸ்வதி

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில்

★ 19 வயது:- மகாஜன எதிர் மானிப்பாய் இந்து

★ 19 வயது;- விக்ரோறியா எதிர் நுணாவில் அ. த. க. பா.

மட்டுவில் ம. வியில்

★ 15 வயது:- சென் ஹென்றிஸ் எதிர் புங்குடுதீவு சண்முகானந்தா

★ 19 வயது:- வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசாமி ம. ம. வி. எதிர் சாவகச்சேரி இந்து.

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்களுக்கான மாவட்டநிலை மேசைப் பந்து இறுதிப் போட்டிகள் நாளை காலை 8 மணி முதல் சுண்டுக்குளி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறும். கோட்டமட்டப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டோர் இறுதிப் போட்டிகளில் பங்குபற்றுவர். (உ)

## காசோலை யாருடையது?

வீதியில் இருந்து இரண்டு காசோலைகளும் மற்றும் தோட்டுச்சுரை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு கோண்டாவிலிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் மாவட்ட செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவற்றை ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் நுணை அரசியல் துறைப் பொறுப்பாளர் கோரியுள்ளார்.

### முள்ளிக் கிராமத்தில் இருந்து

# போஷாக்கு உணவு பெற 70 குழந்தைகள் தெரிவு

யாழ்ப்பாணம், நவ. 4

போஷாக்கு உணவு அளிப்பதற்காக ஆனைக்கோட்டை, முள்ளிக்கிராமத்தில் இருந்து 70 குழந்தைகள் போஷாக்கு புனர்வாழ்வு நிலையத்தினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வு நிலையத்தின் கீழ் இயங்கும் இந்த நிலையம் போஷாக்குக் குறைந்த குழந்தைகளைப் பராமரிப்பதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

கொக்குவிலில் உள்ள போஷாக்கு புனர்வாழ்வு நிலையத்தில் கடந்த மூன்று மாதங்களில் 152 குழந்தைகள் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களுக்காக ஒரு லட்சத்து 57 ஆயிரத்து 827ரூபா செலவிடப்பட்டுள்ளது.

மேலும் இப்போஷாக்கு நிலையத்தைப் பொறுப்பேற்க நோர்வே வாழ் தமிழர்கள் முன்வந்துள்ளனர்.

இதே போன்று மேலும் நான்கு நிலையங்களை அமைக்க சிறுவர் நலன்களில் அக்கறை கொண்டுள்ள அமைப்புக்கள் முன்வர வேண்டும் என தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கேட்டுள்ளது. (இ-எ)

## திருமலையில் வீரச்சாவு

திருமலை மாவட்டம் செல்வநாயகபுரத்தில் இராணுவத்தினருடன் எதிர்பாராத விதமாக இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளான கப்டன் மூர்த்தி (வேலாயுதம் சந்திரகுமார் — மருத்துவமனை வீதி, திருமலை), லெப்டினன்ட் லோகேஸ் அல்லது இன்பன் (கோபாலபிள்ளை ரவீந்திரன்—உவர்மலை, திருமலை) ஆகியோர் வீரச்சாவடைந்தனர். (ஒ–5)

## ஷெல்லின் அதிர்ச்சியால் பயணி மரணம்

தென்மராட்சி, நவ. 4

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு நல்லூர் ஆலங்கேணி — அக்கரைப் பகுதியில் ஷெல் விழுந்து வெடித்ததில் பயணி ஒருவர் அதிர்ச்சியினால் மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

நெல்லியடி நவிண்டிலைச் சேர்ந்த செல்லத்துரை சின்னத்தம்பி (வயது 68) என்பவரே மரணமானவராவார். (ஒ–117)

குறை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் —

கோமாரி கப்பல் மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய், தார்ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறைக்கு இந்த வாரக்கடைசியில் புறப்பட இருக்கிறது என்றும் —

3 500பரல் மண்எண்ணெய், ஆயிரத்து 490 பரல் தேங்காய் எண்ணெய், 100 தார்ப்பீப்பாய்கள் மற்றும் தபால் பொதிகள் இந்தக் கப்பலில் கொண்டு செல்லப்படவிருக்கின்றன என்றும் இலங்கை வானொலி ஒலிபரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-க-5)

கொழும்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தச் சம்பவத்தை பொலீஸார் பார்த்துக் கொண்டு நின்றதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது.

இந்த இளைஞர்கள் கடத்தப்பட்டது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக கடும் போக்கைக் கடைப்பிடிக்க முடிவு செய்திருந்தது தெரிந்ததே. (உ-க-5)

அகத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை எண்ணெய் நிலவாயுக் கமிஷன், இந்தியக் கடற்படை ஆகியவற்றின் உதவியுடன் இந்தக் கப்பல் மூழ்கிக் கிடக்கும் இடம் கண்டுபிடிக்கப்பட்டது. கப்பலின் புகைப்படங்களும் எடுக்கப்பட்டன.

சென்ற ஜனவரி மாதம் இந்தியக் கடற்படையும் கடலோரக் காவல் படையும் மேற்கொண்ட அத்துமீறல் நடவடிக்கையின் போது, விடுதலைப் புலிகள் இந்தக் கப்பலை குண்டு வைத்து தகர்த்ததும்–

அப்போது கேணல் கிட்டு உட்பட 10 பேர் தம்மைத் தாமே அழித்து வீரச்சாவடைந்தும் இன்னும் 9 சிப்பந்திகள் கைது செய்யப்பட்டதும் தெரிந்தவையே. (ஓ–எ)

**பெருமழை பெய்ய வான் உயர மரம் நடு**


## தொழிநுட்பக் கல்லூரிப் பயிற்சி நெறிகள்

வர்த்தமானியில் தவறுதலாக குறிப்பிடப்படாத பின்வரும் பகல் நேர பயிற்சிநெறிகளுக்கும் என்னால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வித் தகைமைகள் வர்த்தமானியில் உள்ளவாறு. விண்ணப்பங்கள் முடிவு திகதி 15-11-1993 ஆகும்.

| பயிற்சி இல. | | பயிற்சி நெறி |
|---|---|---|
| 251 | — | மேசன் வேலை |
| 254 | — | நீர்க்குழாய் பொருத்துனர் |
| 273 | — | மரப்பொறிப்படுத்துனர் |
| 352 | — | மின்னியலாளர் |

– அதிபர்

தொழிநுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்,
1993-11-02.

(சி-6310)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCY

## PROJECT OFFICER

The post holder will be responsible for the day to day implementation of SCF activites. Main requirements are proven experience in Relief and Rehabilitation, and Food security & Income Generating activities. Also experience in project management is required.

The applications should be sent to the following address.

**SAVE THE CHILDREN FUND (UK)**
"Karuvemban Valavu"
Rajaveethy,
Thirunelvely.

**CLOSING DATE:** Two weeks from the advertisement of the post.

(C-6308)

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு கனகரத்தினம்

(இளைப்பாறிய இ. போ. ச. பரிசோதகர்)

முருகேசு கனகரத்தினம் 3-11-93 இல் காலமாகி விட்டார். இவர் தவமணியின் அன்புக் கணவரும், கனகேஸ்வரி (மலேசியா), அமிர்தலிங்கம், விக்கினேஸ்வரி, தனநாயகி (ஜேர்மனி), சிங்கப்பூர் சொர்ணலிங்கம், சிவனேஸ்வரி, முத்துலிங்கம் (பிரான்ஸ்), ரதிவதனா, மதிவதனா ஆகியோரின் அன்புத் தந்தையும் இலங்காசுந்தரம் (மலேசியா), நித்தியானந்ததேவி, இராசரத்தினம் (K. ரத்தினம்), வீரசிங்கம் (ஜேர்மனி), சிவகுமாரி, நாகேஸ்வரன், சாந்தினி, சுந்தரமூர்த்தி ஆகியோரின் மாமனாரும், யோகேஸ்வரன், பாலநந்தினி, சுதாநந்தினி, சதீஸ்குமார், லதாயினி, சஞ்சீவன், சுபாஜினி, சுகந்தினி, சறோஜினி, சிறிவெங்கடேசன், சிறிகணேசன், வினோதினி, தர்மேந்திரா, வினோத், குணசொர்ணா, யாழினி, தர்சினி, சுஜனி, சோபினி, கபில்நாத், சபேசன், சுதர்சன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (4-11-93) வியாழக்கிழமை காலை நடைபெற்று, மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் 10-00 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

தகவல்;
க. சொர்ணலிங்கம்
(மகன்)

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய். (27887)

## சோமகலாவல்லி சண்முகலிங்கம்

(போஷகர், இலங்கை செஞ்சிலுவை சங்கம் யாழ். கிளை)

டாக்டர் சோ. சண்முகலிங்கம் அவர்களின் அன்பு மனைவி 02-11-93 அன்று காலமானார். அன்னார் கொடிகாமம் காலஞ்சென்ற திரு. திருமதி பேரம்பலம் செல்லையா தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற திரு. செ. சோமசேகரம், திருமதி ராசம்மா சோமசேகரம் அவர்களின் மருமகளும், சோமேஸ் விக்னராஜ, நாகநந்தினி, செல்வலெட்சுமி ஆகியோரின் அன்பு தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**Rtn. Dr.** சோ. சண்முகலிங்கம்.
180A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (சி- 6312)

## திரு. ப. மு. நாகராசா (சரவணை)

சரவணையூரைச் சேர்ந்தவரும் முன்னாள் கண்டி பிரபல வர்த்தகரும் மன்னார் உயிலங்குளம் 'ஆனந்தாஸ்ரோர்ஸ்' உரிமையாளரும் ஆகிய திரு. ப. மு. நாகராசா அவர்கள் 03-11-93 புதன்கிழமை அன்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் கனகராசா (ஆனந்தாஸ்ரோர்ஸ், உயிலங்குளம்)' வரதராசா (கனடா) திருமதி க. புஸ்பராணி, திருமதி. அ. யோகராணி, திருமதி, யோ. செல்வராணி (ஆசிரியை உயிலங்குளம் றோ. க. த.க பாடசாலை) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் திருமதி. க. மகாலட்சுமி, திருமதி. வ. புஸ்பமலர் (கனடா) திரு. ச. கனகராஜா (ஓய்வு பெற்ற உதவிக்கணக்காளர், துறைமுக அதிகாரசபை, திருகோணமலை) திரு. கா. அருளானந்தன் (கனடா) திரு. கா. யோகராஜா (உரிமையாளர், டினேஸ் அரிசி ஆலை, உயிலங்குளம், மன்னார்) ஆகியோரின் அன்பு மாமனாரும்—

காலஞ்சென்றவர்களான திருமதி சிவக்கொழுந்து திருமதி நாகம்மா, திரு. ப. மு. சுப்பிரமணியம் மற்றும் திருமதி இராசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான நா. மயில்வாகனம், திருமதி பூங்காவனம் செல்லையா, மற்றும் திருமதி கமலாம்பிகை, தம்பையா ஆகியோரின் மைத்துனரும், பரணீதரன், காயத்திரி, ஜெயகாந்தன் (சிந்மயபாரதி வித்தியாலயம், சுதுமலை), சுரேஸ்குமார் (கனடா), ஷோபனா (கனடா), சிவகுமாரன் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), நந்தகுமாரன் (யாழ். மருத்துவ பீடம் 2ஆம் வருடம்), விஜிதா, சுஜரூபன் (யாழ். இந்துக் கல்லூரி), கோகுலன் (புனித ஜோன். பொஸ்கோ), கோபிகா (கார் மேல் சிறுவர் பாடசாலை), தனஞ்சயன், தர்ஷிகன் ஆகியோரின் பாசமிகு பேரனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04-11-1993) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் இல. 9, கலட்டி அம்மன் வீதி, இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
மு. நா. கனகராசா
(மகன்)

9, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (27890)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04-11-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மலிவு விற்பனை

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி

**05-11-93 - 12-11-93**

வரை மலிவு விற்பனை நடைபெறும்

## குட்லக் எம்போரியம்

பிரதான வீதி, பருத்தித்துறை.

கிளை ஸ்தாபனம்:

## ஆனைமுகன் புடைவை மாளிகை

யாழ். வீதி, நெல்லியடி.

குறிப்பு: இங்கு தற்போது மலிவு விற்பனை நடைபெறுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

(27888)

அரிய சந்தர்ப்பம்!

# ✲ தீபாவளி மலிவு விற்பனை ✲

நவம்பர் 1 ஆம் திகதி முதல்
12 ஆம் திகதி வரை

சகலவிதமான
கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடுகள்
முதலியன மலிவு விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

## அல்டி

269/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6511)

# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 10 — 03 — 1646

மறைவு 04 — 11 — 1988

## கனகசபை தனபாலசிங்கம்

(பொதுசனத் தொடர்பு அதிகாரி வ.பி.போ.சபை, கோண்டாவில்)

என்றென்றும் எமது நெஞ்சில்
இருந்திடும் தெய்வமே! நீ
நன்றொன்றே மனத்திற் கொண்டாய்
நல்லவே புரிந்து வாழ்ந்தாய்
அன்றின்னல் செய்வோர் தம்மால்
அவனியை நீத்தாயேனும்
குன்றன்னாய் காலம் முற்றும்
பக்தியாய் வணங்குவோமே!

— குடும்பத்தினர்

காங்கேசன்துறை. (6712)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 19 — 04 — 1902

மறைவு 05 — 10 — 1993

அமரர்

## திருமதி தங்கம்மா சிவக்கொழுந்து

அன்னாரின் மரணச் சடங்கின் போது எங்களின் துயரங்களில் பங்கு கொண்ட அனைவருக்கும் எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (4-11-93 இல்) நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் பங்கு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

மகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

''அம்பிகை பவனம்''
பலாலி வீதி,
திருநெல்வேலி. (27889)

## சனி, ஞாயிறு கடைகள் திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 4

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் சனி, ஞாயிறு (6 ஆம், 7 ஆம் திகதிகள்) ஆகிய இரு தினங்களிலும் வடபிராந்திய வர்த்தக சங்கப் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் திறந்திருக்கும் என்று அறிவிக்கப்படுகிறது. (ஓ-162)

## சனியன்று பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், நவ. 4

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் நடத்தும் பொது அறிவுப் போட்டிப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. பரீட்சையில் தோற்ற விண்ணப்பித்தவர்கள் தமக்குரிய அனுமதி அட்டைகளை தத்தமது கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-5)

## சுவாமிகளுக்கு வரவேற்பு

தென்மராட்சி, நவ. 4

இந்திய யாத்திரையை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பியுள்ள நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளுக்கு தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியத்தினர் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சாவகச்சேரி வாரிவனநாத தேவஸ்தானத்தில் வரவேற்பு விழாவையும், குருபாத பூஜையையும் நடத்தவுள்ளனர். (ஓ-117)

## குகன்

கல்வி நிலையம்
ஆவரங்கால்

### கலை, வர்த்தகம்

### A/L 94, 95

பொருளியல்:
திரு. க. கலாகரன்
திரு. மா. லோகசிங்கம்

கணக்கியல்;
திரு. S. K. பிரபாகரன்
திரு. அருள்

★ நடைபெறுகின்றன ★

[சி-6298]

## சாவகச்சேரி இந்து பரிசளிப்பு விழா

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அருணாசலம் மண்டபத்தில் அதிபர் திரு. க. சந்திரசேகரா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமாநில கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கமும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கமும் விசேட விருந்தினராக தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரனும் கலந்து கொள்வர். (ஓ-ரி-117)

## G. A. Q - 94/95
## B. A. PART - I

### யாழ். பல்கலைக்கழகம்

வெளிவாரி விரிவுரைகள்
ஆரம்பமாகி விட்டன.

**B- A- FINAL**

விரிவுரைகள் ஆரம்பம்;

**05 - 11 - 1993**

(காலை 8மணி)

விவரங்களுக்கு

S. அருள்நங்கை,

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

[சி-6521]

## கேள்வி அறிவித்தல்

டிராக்ரர் (இழுபொறியந்திரமும் பெட்டியும்)

### வாடகைக்கு அமர்த்துதல் - 1994

வலிகாமம் தெற்கு பிரதேசசபை

மேற்படி இழுபொறியந்திரமும் பெட்டியும் 01-01-94 தொடக்கம் 31-12-94 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்விகள் 19-11-93 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களை பத்திரப்பணம் ரூ25/-ம்வைப்புப் பணமாக ரூ100/-ம் செலுத்துவதன் பேரில் 17-11-93 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

தி. கணேஸ்வரன்
செயலாளர்,
விசேட ஆணையாளருக்காக,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
02-11-93. (சி/2043)

## தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடங்கள்

### உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

கல்வித் தகைமைகள் :- 8ஆம் வகுப்பு தொடக்கம் க. பொ. த (உயர்தரம்) வரை

உயரம் :- 5' - 6"

வயது :- 18 தொடக்கம் 30 வரை

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 04-11-93 ஆம் திகதி தொடக்கம் 20-11-93 ஆம் திகதி வரை பழைய பூங்காவிலுள்ள காவல்துறை அலுவலகத்திற்குச் சமூகம் தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை,
தமிழீழம்.

விவசாயிகளே!
தொழிற்சாலை உரிமையாளர்களே!
இயந்திரப் பாவனையாளர்களே!

உங்கள்

பெற்றோலிய எரிபொருள் பிரச்சினைக்கான குறைந்த செலவில் புதிய மாற்றீடு.

?

நாளைய தினசரியில் இங்கே.

(சி-6314)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org